ஸ்ரீ திரிபுரஸுந்தரீ ஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராய நம:

# ஆர்யதர்மம்.

“இவன் நமது நன்மையை நாடுபவன்” என்று பிறரால் எண்ணப்
பட்டவன்தான் அவர்களது க்ஷேமத்திற்குப் பாடுபடலாம். அப்படி
நினைக்கப்படாதவன் அவர்கள் விஷயத்தில் பாடுபட்டுப் பயனையடையும்
படி செய்திருப்பினும் அவர்கள் தமக்கு நன்மை செய்ததாக நன்றி பாரா
ட்டமாட்டார்கள். அம்மட்டோடில்லாமல் இந்த ஸமயத்தில் எனக்கு
எவ்வளவோ கிடைக்கவேண்டியதுண்டு. அதை இந்த மனுஷ்யன் உப
காரம் செய்யவந்ததுபோல் வந்து கெடுத்துவிட்டானென்றும் சொல்லி
விடுவார்கள். அதனாற்றான் “எல்லோருக்கும் சுகமுண்டாகுக” என்று
ஒவ்வொரு காரியத்திலும் பிரார்த்திக்கவேண்டியதாகக் கூறின சாஸ்திரமே
“கேட்காதவனுக்கு ஒன்றும் சொல்லக்கூடாது” என்று போதிக்கின்றது.
அதனால் ஒவ்வொருவனும் தனது க்ஷேமத்தை விரும்பி அதன் ஸாதனத்
தைக் கேட்கவந்தால் அதை நன்றாகத் தெரிந்துகொண்டவனாயிருந்தால்
ஒன்றையும் மறைக்காமல் உள்ளபடி சொல்லவேண்டுமென்று ஏற்படுகின்
றது. அப்படியிருக்கையில் ஸனாதனதர்மிகளான வர்ணாச்ரமிகளின் முக்ய
தர்மமான விவாஹாதிகளை மற்றவர் எடுத்துப்பேசுவதற்கு என்ன நியாய
மிருக்கிறது. அதன் ஹிதாஹிதங்களைப்பற்றி ஆராய்ச்சி செய்து சொல்ல
வேண்டுமென ஸநாதனதர்மிகள் கேட்டுக்கொண்டார்களா? அப்படி எவரா
வது கேட்டுக்கொண்டிருந்தாலும் அதை நிர்ணயிக்கவேண்டிய பொருப்பு
தர்மாசாரியர்களுக்கேயன்றி மற்றவர்கட்கில்லையே! அப்படியிருக்க வர்ணா
ச்ரமதர்மியாயில்லாதவர் கூட்டம் போட்டுக்கொண்டு எங்கள் கூட்டத்தில்
விவாஹத்தைப்பற்றி ஆராய்ச்சிசெய்து பிரௌடாவிவாஹமே செய்யத்
தக்கது. பாலிகாவிவாஹம்செய்யக்கூடாது என்று தீர்மானித்திருக்கிறோம்
என்று பத்திரிகைகளில் வர்ணாச்ரமதர்மிகளைச் சுட்டிக்காட்டிப் பிரசுரிப்
பது நியாயமில்லாத கார்யமென்று நியாயவாதிகளுக்குத் தோன்றாமலிருக்
காது. அவர்கள் தங்களுடைய கோஷ்டியினருக்காகச் சொல்லிக்கொள்
வதானால் அது உசிதமே. ஸநாதனதர்மிகளை ஸம்போதனம் செய்து
கூறுவது தகாத கார்யம். இந்த ஸனாதனதர்மிகளுக்கு இந்த உண்மையை
வாங்க மூளையில்லையே என்று அனுதாபங்காட்டுவதும் அனுசிதமானது.
அதனால் பிறரது தர்மவழிகளில் பிறர் தலையிடாமல் அவரவர்கள் கார்யங்
களை அவரவர்களே தேடிக்கொள்ளவேண்டியதென்ற சாஸ்திரத்தை அனு
ஸரித்து யாவரும் க்ஷேமத்தையடைவார்களாக.

சுபம்.

பத்திராதிபர்.

௨

# ஆர்யதர்மம்.

பிரமோத-ஸ்ரீ வைகாசி-மீ ௨௩௨

சுருதி ஸ்மிருதிகள் கூறுவதே ஸனாதன தர்ம்ம்.

ஸனாதனதர்மம் சுருதிஸ்மிருதிகளால் போதிக்கப்படவேண்டியதேயன்றி வேறு பிர்மாணங்களால் ஸித்திப்பதில்லை. இதைப் பற்றி விரிந்த விசாரம் பூர்வமீமாம்ஸையில் செய்யப்பட்டிருக்கின்றது. ஸனாதனதர்மிகளான சிஷ்டர்களும் அந்த ஸித்தாந்தத்தையே பின்பற்றி நடந்து வருகிறார்கள். வர்ணாசிரமிகளுக்கு சுருதிஸ்மிருதிகளில் விதிக்கப்பட்ட தர்மங்கள் பூராவும் தற்காலத்திய ஸநாதன தர்மிகளால் பெரும்பாலும் அனுஷ்டிக்கப்படவில்லையாயினும் ஆங்காங்கு சில மஹான்கள்ஒன்றும் விட்டுப்போகாமல் எல்லாவற்றையும் செய்துகொண்டே இருக்கிறார்கள். அவர்களுடைய தர்மங்களில் மற்றவர் சட்டமிடுவது சாஸ்திரத்திற்கு ஒத்ததன்று. லௌகிகமான வியவஹாரரீதியில் பார்த்தாலும்இது சரியானதல்லவென்று சட்டமறிந்தவர் கூறுகின்றனர். தஞ்சை ஜில்லா பிராமணர் ஸநாதன தர்மஸம்ரக்ஷண ஸபையார் வெளியிட்ட 4-நெ, பிரசுரத்தைப் பார்த்தால் இதன் உண்மைவிளங்கும். அதைக்கீழ்க்கண்டவாறு கண்டுகொள்க. அதன்படியும் சுருதி ஸ்மிருதிகள் கூறுவதே ஸனாதனதர்மமென்றாகிறது. அதையே யாவரும் ஆச்ரயித்து சுகப்படுவார்களாக. சுபம்.

பத்திராதிபர்.

## நெ. 4 ஸநாதனதர்மம்.

'சார்தாசட்டம்' என்கிற.

## பால்யவிவாஹத் தடைச்சட்டம்

சட்டப்படி செல்லுமா ?

ஷை சட்டமானது எந்த மசோதாப்பிரகாரம் ஏற்பட்டிருக்கிறதோ அந்த மசோதாவானது கவர்னர் ஜனரல் அவர்களின்

அனுமதிபெற்ற மசோதாவுக்கு முற்றும்பல அம்சங்களில் வித்தியாசமுள்ளதானபடியாலும் அப்படி பல அம்சங்களில் மாறுபாடடைந்த மசோதாவுக்கு சட்டப்படி கவர்னர் ஜனரல் அவர்களின் அனுமதி புதிதாய் ஏற்படாதபடியாலும் ஷை சட்டமே முழுவதும் சட்டவிரோதமென்றும் சட்டஸபையார் அதை ஏற்படுத்த அதிகாரமற்றவர்களென்றும் சித்தாந்தம் செய்து சென்னை அட்வோகேட் மகா-ள-ஸ்ரீ P. R கணபதி அய்யர் அவர்கள் தெளிவாய் எழுதியுள்ளதும், மதிராஸ் லா ஜர்னல்(Madras Law-journal) 57-வது வாலியூமில் பிரசுரம் செய்யப்பட்டிருக்கிறதுமான வியாசத்தை ஸநாதனதர்மத்தில் சிரத்தையுள்ள நம் சினேகிதர்கள் பார்த்திருக்கலாம்.

பல அம்சங்களில் மாறுதல் அடைந்த ஷை மசோதாவானது 'ஹிந்து விவாஹங்கள் மதசம்மந்தமான 'ஸம்ஸ்காரம்' என்ற விஷயத்தையும் 'மகமதியரின் மதசம்மந்தமானதும் ஸமூஹசம்மந்தமானதுமான' சட்டத்தையும் பாதிக்கிறது.

எந்தபிரிட்டிஷ் பார்லியமெண்டு ஆக்டுகளின்படி இந்திய சட்டசபைக்கு சட்டம்செய்ய அதிகாரம் ஏற்படுகிறதோ அந்த ஆக்டுகளுக்கு விரோதமாக ஷை சார்தாசட்டம் ஏற்பட்டிருப்பதால் அதுசட்டப்படி செல்லாதென்று பாரிஸ்டர் மிஸ்டர் H. S. சூராவார்டி அவர்கள், அட்வோகேட் ஸ்ரீயுதநரேந்திரநாத்சேத் அவர்கள் ஏஅட்டர்ணி ஸ்ரீயுத சாருசந்திரமித்ர அவர்கள் இவர்கள் மூவரின் ஏகோபித்த அபிப்பிராயத்தை வெளியிட்டிருந்த 'வசுமதி' பத்திரிகையிலிருந்து எடுத்துஸநாதனிஸ்டு பத்திராதிபர்வெளியிட்டிருப்பதற்கும் நாம் நன்றியுள்ளவர்களாயிருக்கிறோம்.

பிரிட்டிஷ்பார்லியமெண்டு ஆக்டுகளிலிருந்து இதற்கு சம்மந்தமான அம்சங்கள்மட்டில் அடியில் குறிக்கப்பட்டிருக்கின்றன. சொத்து சுதந்தரம் குடும்பம் மதாசாரங்கள் இவைகளைப்பற்றின வரையில் ஹிந்து தகப்பன்மார்களுக்கும் மகமதிய தகப்பன்மார்களுக்கும் குடும்பஎஜமான்களுக்கும் அந்தந்தக்குடும்பங்களிலுள்ள பாத்தியங்களையும் அதிகாரங்களையும் ஷை ஆக்டுகள் பாதிக்காமல் காற்கின்றன. ஷை ஆக்டுகளுக்கு விரோதமாயிருக்கிற ஷை சார்தாசட்டம் செல்லுபடியாகமாட்டாது. ஹிந்து குடும்பங்களிலும் மஹமதிய குடும்பங்களிலும் தகப்பன்மார்களுக்கும் குடும்பத்தலை

வர்களுக்கும் கிரமமான கார்டியன்களுக்குமுள்ள பாத்தியத்துக்கு விரோதமாய்சட்டம்ஏற்படுத்தஇந்தியசட்டசபைக்கு அதிகாரமில்லை

(1) 1780ஹூத்திய ஈஸ்ட் இந்தியா கம்பெனி ஆக்டு 21 ஜார்ஜ் 3 சாப்டர் 70 செக்ஷன் 18(இதுவங்காளத்துக்கு ஏற்பட்டது)

பிரிவு 18 சுதேச ஜனங்களின் சிவில் (அதாவது சொத்து சுதந்தரம் குடும்ப மானேஜ்மெண்டு முதலிய) சம்மந்தமானதும் மத சம்மந்தமானதுமான பழக்கவழக்க அனுஷ்டானங்களைக் காப்பாற்றும்பொருட்டு அந்தந்தக்குடும்பங்களிலுள்ள தகப்பன்மார்களுக்கும் குடும்பத்தலைவர்களுக்கும் ஹிந்து லாப்படிக்கும் மகமதிய லாப்படிக்கும் அனுஷ்டித்து வரப்படும் பாத்தியங்களும் அதிகாரங்களும்அவாவர்கள்குடும்பங்களில் இதன்மூலமாய்பாதுகாக்கப்படுகின்றன. இங்கிலாந்துதேசச் சட்டப்படி நியாயமற்றதாயிருந்தாலுங்கூட அந்தக்குடும்பத்தைச் சேர்ந்தவர்களைப்பற்றினமட்டில் அந்தந்த ஜாதிக்குறித்தான விதிகளின்படிக்கும் சட்டப்படிக்கும் சுதேசஜனங்களால் செய்யப்படும் செய்கைகள் கிரிமினல் குற்றமாகமாட்டாது. அப்படி குற்றமாகத்தீர்மானிக்கவும் கூடாது.

(2) 1897-ஹூத்திய ஈஸ்டு இந்தியா கம்பேனி ஆக்டு 37 ஜியார்ஜ் 3 சாப்டர் 132,12வது செக்ஷன் மேலே கண்ட 1780ஹூத்திய ஆக்டு வாசகத்தையேதான் உள்ளது. (இது கல்கத்தா, மதராஸ், பம்பாய் இந்தவிடங்களுக்கு ஏற்பட்டது.)

(3) 1915-ஹூத்திய இந்திய கவர்ண்மெண்டு ஆக்டு 5 & 6 ஜார்ஜ் 5 சாப்டர் 61 செக்ஷன் 67 (2)

(b) 67 (2) பிரிவு மேல் இந்திய சட்டசபை(Council of State) யிலாவது லெஜிஸ்லேடிவ் அஸெம்பிளி என்கிற டில்லி ஸபையிலாவது பிரிட்டிஷ் இந்தியாவிலுள்ள எந்த வகுப்பினரின் மதம் அல்லது மதாசாரம் அல்லது வழக்கபழக்கங்கள் இவைகளை பாதிக்கும்படியான ஒரு சட்டமும் கவர்ணர்ஜனரல் அவர்களின் அனுமதியை முந்தி பெறுமல் கொண்டுவரக் கூடாது

பிரிவு 84 (1916-ஹூ கவர்ன்மெண்டு ஆப் இந்தியா திருத்தல் சட்டம்) மேலே கண்ட 1915ஹூத்திய ஆக்டு 84வது செக்ஷன் கடைசியில் அடியில் கண்டபடி சேர்த்துக்கொள்ளவேண்டி

யதாக 1916-௵த்திய ஆக்டு 2-வது செக்ஷன் சொல்லுகிறது.

### சேர்க்கவேண்டிய அம்சம்

இந்த ஆக்டுக்காவது பார்லிமெண்டின் வேறு எந்த ஆக்டுக்காவது விரோதமாய் இந்திய கவர்ன்மெண்டு அதிகாரிகளால் செய்யப்படும் எந்தச் சட்டமும் எவ்வளவுமட்டில் ஷை ஆக்டுகளுக்கு விரோதமாயிருக்கிறதோ அவ்வளவுமட்டில் சட்டமாக மாட்டாது.

1780-௵த்திய ஆக்டையும் 1797-௵த்திய ஆக்டையும் ரத்துசெய்த 1915-௵த்திய ஷை ஆக்டின் ஷிடியூலில் மேலே கண்ட 1780-௵த்திய 18-வது செக்ஷன் 1797 இந்திய 12-வது செக்ஷன் இவ்விரண்டு செக்ஷன்களும் ஊர்ஜிதத்திலிருப்பதாகக் கண்டிருப்பதைக்கொண்டும் பிறகு 1916-௵த்திய ஆக்டில் ஷை 1915-௵த்திய 84வது செக்ஷனோடு புதிதாய் சேர்க்கப்பட்டிருக்கிற வாசகங்களைக்கொண்டும் ஷை சாரதாசட்டம் ஹிந்துக்கள் மகமதியர்களாகிய இந்தியர்களைக் கட்டுப்படுத்தக்கூடியதல்லவென்று சித்தாந்தம் செய்ய ஹேதுவாயிருக்கிறது.

---

# நெ. 5 ஸநாதன தர்மம்.

### வேதவியாஸதினம்.

ஸ்மார்த்தர்களானாலும் ஸ்ரீவைஷ்ணவர்களானாலும் மாத்வர்களானாலும்வேதமந்திரங்களையும் ஸ்மிருதிகளையும் ஒப்புக்கொள்ளுகிற விஷயத்தில் ஒருவிதமான பேதபுத்தியும் நமக்குள் இல்லை. மோக்ஷஸம்பாதனத்துக்குள்ள வேதாந்தபரமான சில வித்தியாஸங்களைக்கொண்டுகர்மபரமான அடிப்படையிலுள்ளவர்கள்சச்சரவுபடவேண்டியதில்லை. இப்போது பிராம்மண்யத்துக்கு வந்திருக்கிற தசையையுத்தேசித்தாவது த்ரிமதஸ்தர்களும் ஒன்றுசேர்ந்து சிராவண தினத்துக்கு மறுதினமாகிய காயத்ரீஜபதினத்தை 'ஸ்ரீ வேதவியாஸதினம்' என்று வருஷந்தோறும் பெரியஉத்ஸவமாகக் கொண்டாடவேண்டியதாக அபிப்ராயப்படுகிறோம்.

இந்த ஸம்வத்ஸரத்தில் காயத்ரீஜபதினமானது ஆடி௴ 26௳ (10—8—30) ஞாயிற்றுக்கிழமைதினம் வருகிறது. ஒவ்வொரு

அக்கிரகாரத்திலும் பட்டணங்களில் பிராமணர்கள் நிறைந்தவிடங்களிலும் த்ரிமதஸ்தர்களும் மதபேதமின்றி கூடி ஸ்ரீ வேதவ்யாஸ தினமஹோத்ஸவத்தைக்கொண்டாட ஏற்பாடு செய்தால் பிராமணர்களுக்குள் ஒற்றுமைக்கு ஹேதுவாவதோடு பிராஹ்மண்யத்துக்கு ஹானிவாராதபடிக்கும் அது தழைத்தோங்கும்படிக்கும் செய்யலாம்.

காயத்ரீயானது வேதமாதாவானபடியாலும் ரிக், யஜுஸ், ஸாமவேதிகளான திரிவேதிகளுக்கும் காயத்ரீஜபதினம் பொதுவானதாலும் அந்த தினத்தில் கொண்டாடுவது எவ்வகையிலும் பொருத்தமாயிருக்கும்.

## யக்ஞோபவீதம்.

மற்றொரு விஷயம்:— சிராவணகாலத்தில் நமக்குக் கிடைக்கிற யக்ஞோபவீதங்கள் பிராம்மணர்களால் நூற்கப்பட்டவைகளாக நினைக்கமுடியாமலிருக்கின்றன. இதர ஸந்தர்ப்பங்களிலும் நல்ல யக்ஞோபவீதங்கள் கிடைப்பதில்லை.

ஏழை வைதிகர்கள் கடைகளில்விற்கும் அன்னியதேசத்துக் கண்டுநூல்களையும் பின்னும் இதரநூல்களையும் உபயோகித்து பூணூல்கள் தயாரித்துவிடுகிறார்கள். அப்படிப்பட்ட பூணூல்களை நாம் உபயோகிப்பதைவிட யக்ஞோபவீதமே இல்லாமலிருக்கலாம்.

ஆகையால் நாமேசொந்தத்தில் யக்ஞோபவீதம் தயாரிப்பது தான் மேல். இதற்குப் பூர்வீகஸம்பிரதாயப்படி நூல் நூற்பது சிரமமாயிருந்தாலும் 'சர்க்கா' என்கிற கைராட்டினத்தைக் கொண்டே நாமும் நம் ஸ்திரீகளும் யக்ஞோபவீதத்துக்கு வேண்டிய நூல் நூற்கலாம்' அப்படிச்செய்தால் கதர் நெசவுக்கும் நூல் தயாரிக்க வழியாகும். நூல் தயாரித்தபிறகு தெரிந்த வைதிகர்களைக்கொண்டு நம் வீட்டில்தானே யக்ஞோபவீதத்தை மந்திரவத்தாக முடிச்சுப்போடச்செய்து அவர்களையும் ஆதரிக்கலாம்.

ராட்டினத்தில் இரும்புக்கதிருக்குப்பதிலாக வெள்ளிக்கதிர் அல்லது செப்புக்கதிர் போட்டுக்கொண்டால் 'இரும்புக்கதிர்' ஆக்ஷேபணை நீங்கிவிடும்.

தஞ்சைஜில்லா பிராமணர் ஸநாதநதர்ம ஸம்ரக்ஷணஸபை.

# கடன் கூடாது.

(214-வது பக்கத்தொடர்ச்சி.)

பத்திரகன்:— (இவ்வார்த்தையைக்கேட்டு வாய்விட்டலரி, பூமியில் விழுந்து புரண்டும் நல்ல புத்தியை அடைந்து) நான் இப்பொழுதுகிருதார்த்தனுனேன். ஏ காளையே! உனக்கு மங்களமுண்டாகட்டும் உன் நன்மொழிகளால் மகாபாபத்திலிருந்தும் விடுபட்டேன். ஆகையால் இனி உன்னை கஷ்டப்படுத்தமாட்டேன் உன் இஷ்டப்படி செல்லுவாயாக.

காளை:— நான் போகமாட்டேன். முன்பு நான் உன்னிடம் கடன் வாங்கியிருக்கிறேன். அதைக் கொடுக்காமற் போய்நான் சுகமடைய முடியாது.

பத்திரகன்:— உனக்கும் இக்கிடாவுக்கும் எப்படி நான் கடன் கொடுத்தேன்? நீங்களிருவரும் என்னிடம் கடனாளியானது எப்படி என்பதை உரைக்கவும்.

காளை:— முன்பு மனுஷ்யனுக நாங்கள் இருந்தபோது உன்னிடம் மூன்றுவிராகன் கடன்வாங்கி அதைத்திருப்பிக்கொடுக்காமல் இறந்துவிட்டபடியால் இப்பொழுது இந்த கோரமானதும் பயத்தைக் கொடுக்கக் கூடியதுமான மாடாகப்பிறந்தோம், இதிலிருந்தும விடுதலையடைவதற்கு உபாயத்தைத் தெரிவித்தால் நாங்கள் தப்பித்துக்கொள்வோம்.

பத்திரகன்:— நீ சொன்ன அந்த மூன்று விராகனையும் கொடுத்துவிட்டு, இந்த எருமைக்கிடாவுடன் இஷ்டப்படி செல்லலாம்.

காளை:— "நீ புருஷாகாரமாயிரு உண்மையைச் சொல்லுகிறேன். எங்களிருவருக்கும் கடன் கொடுக்கவேண்டிய ஓர் சூத்திரன் வரப்போகிறன். அவனிடமிருந்து மூன்று விராகனை எங்களுக்காக நீ வாங்கிக்கொண்டு எங்களை அவனிடம் ஓட்டிவிடு என்றுசொல்லி அவனை நமஸ்கரித்து பேசாமலிருந்தது. பிராமணன் ஆச்சர்யமுற்றிருந்தான்.

இடம்: காச்மீரதேசத்தில் ஓர் கழனிவெளி

(காலம்:— பகல் பன்னிரண்டு நாழிகை.)

ஓர் சூத்தி:— ஐயா! உழவுமாடு செலவழிக்கிறதுண்டா?

பத்திர:— விலையோடுவந்தால் கொடுக்கிறேன்.

சூத்தி:— இந்தக்கருப்புக்காளேயும், எருமைக்கிடாவும்என்னவிலே? உழவில் வேலே செய்யுமோ? கருப்பும், சிகப்பும் கால்மாடு, பொருமானவிலே சொல்லுங்கள்.

பத்திர:— மூன்று விராகனுக்குக்குறைந்தால் கேட்கவேண்டாம், ஒரே விலேதான்.

சூத்தி:— "பெற்றுக்கொள்ளுங்கள் ரூபாயை" என்று ரூபாயை பத்திரகனிடம் கொடுத்துவிட்டு மாடுகளே ஓட்டிக்கொண்டு தன் ஊர்போய் சேர்ந்து, கொட்டகையில் நன்ருகக் கட்டிவிட்டு வீட்டில் புத்திரர்களுடன் சாப்பிட்டுக்கொண்டிருந்தான்.

தர்ம:— பிற்பாடு என்ன நடந்தது தாதா.

பீஷ்மர்:— கொட்டகையில் கட்டியிருந்தமாடுகள் ஒன்றுக்கொன்று முட்டிக்கொண்டும், தலேக்கயிறுகளில்மாட்டிக்கொண்டு விழுந்து இரண்டும் உயிர் துறந்தது.

தர்ம:— அப்புறம்! அப்புறம்!!

பீஷ்ம:— சாப்பிட்டுக்கொண்டிருந்த சூத்திரன் சுற்றத்தாரோடு ஓடி வந்து பார்த்து "ஐயோ ஐயோ என்று அலரிக்கீழே விழுந்து புரண்டு அழுதான். இவன் இவ்வித நிலேமையில் இருக்கும்போது, காளேயும், கிடாவும் திவ்யவிமானத்தில் ஏறிக்கொண்டு சூத்திரனுக்கு எதிரில் வந்து ஏ புருஷனே என் விசனப்படுகிருய்? போனஜன்மத்தில் நீ எங்களிடம் கடன்வாங்கிக் கொடுக்காதிறந்தாய். நாங்கள் இருவரும் அந்த பிராமணனிடம் கடன் வாங்கியிருந்தோம். இப்பொழுது எங்களே விலேக்கு வாங்கினபடியால் உன் கடனும், எங்கள் கடனும் தீர்ந்துவிட்டது. சீக்கிரம் சுவர்க்கம் வந்து சேர் என்று சொல்லிவிட்டு தேவர்கள் புடைசூழ தேவலோகம் போய்ச்சேர்ந்தன. சூத்திரனும் குடும்பத்தோடு விண்ணுலகம் போய் சேர்ந்தான்.

தர்ம:— தாதா வேதமோதாத பத்திரகன் என்ன செய்தான்? அவன் பாக்கி சரிதத்தைக் கேழ்க்க ஆவலுள்ளவனுயிருக்கிறேன்.

பீஷ்ம:— மாடுவித்த பணத்தைக் கொண்டு, பிராமணர்களேக்கொண்டு பிராயச்சித்தம் செய்துகொண்டு, பகவானேக் குறித்து

தவம் புரிந்தான், பாபம் நீங்கிற்று. கிருஷ்ணா ! கோவிந்தா ஸதானந்தா என்னைக்காப்பாற்று என்றும் மனங்கரையக் கூப்பிட்டான். எங்கும் அவனுள்ளத்தும் வசிக்கும் ஈசுவரன் ஆகாசவாணியாக ‘ ஏ பக்தா ! இப்புவியில் எந்த வஸ்துவில் விருப்பமோ அவைகளை அனுபவித்து சுவர்க்கம் வந்து இந்திரனிடம் சூர்ய சந்திரர்களுள்ளவரையில் இருக்கக்கடவாய்’ என்று அருள்புரிந்தார்.

தர்ம:— உடனே தேவலோகம் போய்விட்டானா ?

பீஷ்ம:— இல்லை. கர்மகாண்டத்தில் கூறியவைகளையெல்லாம் நிஷ்காமனாக ஈசுவரப்ரீதியாகச் செய்தும் புத்திர பௌத்திரர்களை அடைந்தும் ஸத்ஸங்கத்தின் மஹிமையால் ஆகாசசாரிகளால் கொண்டாடப்பட்டு சுவர்க்கம் அடைந்தான். ஆகையால் தர்மபுத்திரா நீயும் ஸாதுஜன ஸேவைசெய்துவா. பாபியாயிருந்தாலும் ஸத்ஸங்கத்தால் மேலுலகு புகுவான். கடன் வாங்கும்பொழுதுசுகமாயிருக்கும். கொடுக்கும்போதுப்ராண சங்கடமாயிருக்கும். கடனாளிக்குஇறக்கும்போதும்பிறக்கும் போதும்சுகமில்லை. கடனில்லாமல் காய் கிழங்குகளைத்தின்று வாழலாம். அல்லது ஐந்துநாளைக்கோர்தரம் புசிக்கலாம். கடன்பட்டு ராஜ்யமாளுவதை விட கடனில்லாமல் பட்டினியாயிருக்கலாம்.

கடனானது இந்த ஜன்மத்திலும் மறுஜன்மத்திலும் கஷ்டத்தைக் கொடுக்கக் கூடியது. கடனாளியாக மாத்திரம் இல்லாவிட்டால் எவ்வளவோ எல்லாவித மேன்மையையும் பெறலாம். இந்த சரித்திரம் நாரதரால் சொல்லப்பட்டது. இதைக் கேட்பவர் படிப்பவர் பிரும்மலோகம் செல்லுவார்கள். ஓர் கடனுள்ள புருஷன் பக்தியோடு ஆறுமாதம் இதைக்கேட்டால் கடன்நீங்கிவிடும். ஆகையால் எக்காலத்திலும் நீ தர்மத்தையே செய்துவா. இங்கும் மேலுலகிலும் தர்மமொன்றே உற்றதுணை என்று பீஷ்மரால் சொல்லப்பட்டதை தர்மபுத்திராதிகள் கேட்டு அவ்வழியேநடந்து ஆனந்தமுற்றனர்.

சுபம் !

வி. உமாமகேசுவரசாஸ்திரிகள்.

# ஓர் ஸந்தேகம்.

அநுஷ்டானத்தில் ஸூரியநமஸ்காரம் செய்யும்போது भद्रं कर्णेभिः என்கிற, आरुणम् முதல் பிரச்னத்தில் உள்ள 132 பஞ்சாதிகளைச் சொல்லி 132-நமஸ்காரம் செய்து வருகிறார்கள். ஆனால் அதன் விபரம் மாத்திரம் தெரியவில்லை. சில பெரியோர்கள் அநுவாகத்திற்கு ஒன்று செய்வதே போதுமானது என்கிறார்கள். சிலர், பஞ்சாதிக்கு ஒன்று செய்தால் நமஸ்காரம் 100 அதிகமாக இருப்பதால் பஞ்சாதிக்கு ஒரு நமஸ்காரம் செய்வதுதான் நல்லது என்கிறார்கள். வேறுசிலர் வாக்யத்திற்கு ஒன்று செய்தால் பஞ்சாதிக்கு ஒன்று செய்வதைக் காட்டிலும் நமஸ்காரம் இன்னும் அதிகமாக இருக்குமே என்று தர்க்கம் செய்கிறார்கள். ஆகையால் தகுந்தபடி பதில் கிடைக்கவில்லை. ஆதலால் ஷை விஷயத்தைப்பற்றி விபாமாக பஞ்சாதிக்கு ஒரு நமஸ்காரமா? அநுவாகத்திற்கு ஒரு நமஸ்காரமா? அல்லது வாக்யத்திற்கு ஒரு நமஸ்காரமா? என்? எது சாஸ்திரசம்மதமானது என்பதை ஆராய்ந்தும் வசனமிருந்தால் வசனத்துடனும், இந்த ஆர்யதர்மத்தின் மூலமாகவே பண்டித மணிகள் எழுதுவார்கள் என்று எதிர்பார்க்கிறேன். T. V. தர்மராஜகனபாடிகள்.

---

கோவல் வீரட்டம்

ஆர்யதர்மாபிவர்த்தனி பிராம்மணமஹாஸபை

## ஸ்ரீசங்கரஜயந்திமஹோத்ஸவம்.

இன்று (பிரமோதூத-ஷு சித்திரை- மீ 21௳) 3-5-30 ஸ்ரீ ஜகத்குரு பரமஹம்சபரிவிராஜகாசார்ய ஸ்ரீசங்கரபகவத்பாதாளின் ஜயந்திதினமானதைமுன்னிட்டு இந்நகர் ஆர்யதர்மாபிவர்த்தனீ ப்ராம்மணமஹாஸபையின்சார்பாக மாலை 4மணிக்கு ஸ்ரீபிரகந்நாயகியார் ஸந்நிதி முன்மண்டபத்தில் ஓர் மஹாஸபை கூடி। ஸ்ரீபரமாசார்யாளின் திவ்யசரித்திரசிரவணம் நடைபெற்றது. அதுபோது இந்நகர் உயர்தரகலாசாலை வடமொழி ஆசிரியர் நியாயசிரோமணி ஸ்ரீமான் ஆராவமுதய்யங்காரவர்கள் இன்று ஸ்ரீசங்கரஜயந்தி

யோடு ஸ்ரீராமானுஜஜயந்தியும் சேர்ந்திருப்பதை எடுத்துச்சொல்லி ஆசார்யமஹிமையைப்பற்றி விஸ்தாரமாய் உபந்யஸித்தார்கள். அதன்பின் மேற்கண்ட ஸபையின் அங்கத்தினர் வ. சு, நடேசய்யர் ஸ்ரீ சங்கரவிஜயத்திலிருந்து ஆசார்யாளுடைய சரித்திரத்தைப் பற்றி பிரசங்கித்தார்கள்.

பின்பு ஸ்ரீஆசார்யாளுடைய படத்திற்கு அலங்காரம், பூஜை நைவேத்தியம் முதலியன செய்யப்பெற்று சிரவணத்திற்கும் ஆராதனைக்கும் வந்திருந்த எல்லோருக்கும் பழம், சர்க்கரை, பானகம், நீர்மோர் முதலியனவும் சந்தனம், தாம்பூலமும், விநியோகிக்கப் பெற்று சபை இனிது நடைபெற்றது.

பிரமோதூத-௵ சித்திரை-௴ 22௳ (4—5—30) இன்று மேற்கண்ட ஸபையின் வாராந்தக்கூட்டம் நடைபெற்றது. வழக்கம்போல் அங்கத்தினரில் சிலரும் மற்றும் சிலரும் வந்திருந்தார்கள். மணலூர்பேட்டை பிரம்மஸ்ரீ கிருஷ்ணய்யாவர்கள் வைசாக புராணத்திலிருந்து இம்மாதத்தில் தீர்த்தஸ்நானம், ததியோதன தானம், வெள்ளரிக்காய்தானம் முதலியன விசேஷ பலனைத் தரக் கூடியதென்று சில புராதன இதிஹாஸசரித்திரங்களைக்கொண்டு விஸ்தாரமாக உபந்யஸித்தார்கள். இதைச் சிரவணித்தவர்கள் எல்லோரும் இப்படியே நம் முன்னோர்கள் நமக்கு ஆத்மார்த்தமாயும் இஹபராசாதனமாயுமுள்ள பல ஸாமான்ய தர்மங்களை அனுஷ்டித்துக் காட்டியிருந்தும் வெகு சுலபமான ஸாதாரணதர்மங்கள்கூட இப்போது நம்முடைய அசிரத்தையால் கைவிடப் பட்டு நமக்கு எவ்விதத்திலும் உபயோகப்படாத பல நூதன முறைகள் வழக்கத்தில் வந்துகொண்டிருப்பதைத் தடுத்து இது போன்ற புராணசிரவணம் செய்து நம்முடைய ஸநாதன தர்ம மார்க்கத்தைக் கடைப்பிடித்து ஆன்மலாபப்பேற்றையடைந்துய்ய வேண்டுமென்று ஓர் தீர்மானம் கொண்டுவர அது எல்லோராலும் ஏகோபித்து நிறைவேற்றப்பெற்றது.

இன்று 5—5—30 மேற்கண்ட ஸபைகளின் சார்பாக ஓர் விசேஷக்கூட்டம் ஒன்று நடைபெற்றது. இதற்கு த்ரிசிரபுரத்திலிருந்து இவ்விடம் விஜயம்செய்திருந்த திருச்சி பிஷப் ஹீபர் காலேஜ் ஹைஸ்கூல் தலைமைத்தமிழ்பண்டிதர் பிரம்மஸ்ரீ R. துரைசாமி அய்யாவர்கள் "மொழியின் பிறப்பும் தமிழின் சிறப்பும்"

என்ற தலைப்பின்கீழ் ஓர் அரிய சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். அதுகாலை பாடசாலைப் பரிசோதகர் பிர்மஸ்ரீ முத்துசாமி அய்யர் அவர்கள் M.A.,L.T., தலைமை வகித்தார்கள். உபந்யாஸகர் மொழி நூல் வழி தமிழ்எழுத்துக்களின் பிறப்பிலுள்ள அதிசூக்ஷ்மமான இயற்கை தத்துவங்களை இனிது விளக்கி இவைகள் தெய்வீக அமைப்பாக நம் முன்னோர்களால் எண்ணப்பட்டவைகள் என்று எடுத்துக்காட்டியபின் தமிழ்பாஷையில் தற்போது வழக்கத்தில் வந்துள்ள பல விபரீதமான தப்பிதங்களை எடுத்துச்சொல்லி இக் குறைவுகளை நீக்கி நம் தாய்மொழியாகிய தமிழ்மொழியை வளர்க்கவேண்டிய நம் கடமைகளை விஸ்தரித்துப்பேசினார்கள். பின்னர் தலைவரவர்கள் நம் உபந்யாஸகர் ஓர் தமிழ் ஆசிரியராய் இருப்பதால் அவர்களுக்குத்தான் அவர்கள் எடுத்துக்காட்டிய குற்றங்கள் அடிக்கடி கவனிக்கநேரும் என்றும், ஆகவே அவர்கள் போன்ற ஆசிரியர்கள் பெருமுயற்சியாலேதான் நீங்கவேண்டுமென்றும் அதற்கு நம் தமிழ்மக்கள் எல்லோரும் வேண்டிய உதவிசெய்யக் கடமைப்பட்டுள்ளார்கள் என்றும் எடுத்துச் சொல்ல சபை இனிது முடிந்தது.

சுபம்.

K. R. சுப்பிரமணியசாஸ்திரி,
காரியதரிசி.

---

பனையப்பட்டி அக்ரஹாரத்தில்

## ஸ்ரீ சங்கரஜயந்தி உத்ஸவம்.

---

புதுக்கோட்டை ஸம்ஸ்தானம் பனையப்பட்டி ஸ்ரீமீனாக்ஷிபுரம் அக்ரஹாரத்தில் நடைபெற்றுவருகிற ஸநாதன தர்மஸம்வர்த்தினீ ஸபையாரால் நிகழும் பிரமோதூத வருஷம் சித்திரை மீ 17உ மங்கள வாரமும் வைசாக சுத்தப்பிரதமையுங்கூடிய சுபதினம் ஸ்ரீசங்கர ஜயந்தி உத்ஸவம் ஆரம்பம் செய்து ஸ்ரீ சங்கராசார்யாள் ஸ்ரீசாரதாம்பாள் படத்திற்கு ஆவாஹனம் செய்து நாள்தோறும் காலையிலும் மாலையிலும் உபநிஷத்பாராயணத்துடன் பூஜை செய்யப் பெற்றது.

காரியதரிசி ராமஸ்வாமி அய்யர் அவர்கள் அக்ராஸனத்தில் வெங்கடேசஜோஸ்யர் சங்கரவிஜயத்தை உபந்யாஸரூபமாயும், வி.ம. சுப்பராயஅய்யர் ஆசார்யாள் மகிமையையும், நாராயணஸாமி

அய்யர் சங்கராசார்ய அவதாரவிசேஷத்தையும், திருச்செந்தூர் வாகவி சங்கரநாராயண அய்யர் ஸ்ரீமத்ராமாயணம் பாதுகாபட்டாபிஷேகத்தையும் உபந்யாஸம் செய்தார்கள்.

சொர்ணக்காடு நாராயணஸாமி பாகவதர் ஸ்வரகெத்து வாத்யத்துடன் வேணுகானபண்டித சுந்தரேசபாகவதர் ஐந்து நாளும் பஜனை செய்தார்கள்.

மஹாராஜன்கள் யாவரும் பூஜை உபந்யாஸம் நடைபெறும் காலங்களில் தவாது வந்திருந்து தரிசனசிரவணம் செய்தனர்.

ச. நாராயணஸாமி அய்யர்,
ஸபை உபகார்யதரிசி.

---

# மந்திரசாஸ்திர மஹிமை.

---

1930ளூ மார்ச்சுமீ 20உ முதல் 25உ முடிய மதுரை அட்வகேட் ஸ்ரீமான் N. நடேசய்யர் (M L A.) அவர்களின் பங்களாவில் சாயங்காலம் 7மணி முதல் 8மணி முடிய சப்தகோதாவரீ நிவாசியான பிர்மஸ்ரீ வேங்கடேச சாஸ்திரிகள் அவர்களால் செய்யப்பட்ட உபன்யாஸச் சுருக்கம்.

மகனீயர்களே! உலகில் சிருஷ்டி பெற்ற மனிதர்கள் ஜனன மரணரூபமான ஸம்ஸாரத்தில்

पुनरपि जननं पुनरपि मरणं पुनरपि जननीजठरे शयनम् ।
इह संसारे बहुदुस्सारे कृपयाऽपारे पाहि मुरारे ॥

"அடிக்கடி மரிக்கிறதும் அடிக்கடி தாயின்வயிற்றில் சயனிப்பதும் பிறப்பதுமான ஸாரமற்ற கரையில்லாத இச்சம்ஸாரத்தினின்றும் கிருபையால் ஏ முராரியே என்னைக் காப்பாற்று" என்ற பரமாசார்யாள் அனுக்கிரஹித்தபடி யாவரும் ஜனனமரண ரூபமான ஸம்ஸாரத்தைத் தாண்ட முயலுவதற்காகப் பரமேசுவரன் பலவிதமாய் வேதசாஸ்திரங்களைப்பல பல அபிப்பிராயமுள்ளவைகளாயும் அவரவர்களின் அனுஷ்டிதமான புத்திவைசித்திரியத்திற்கேற்றவாறும் கல்பித்தபோதிலும் புராணம் முதலிய சமஸ்தங்களுக்கும் தாத்பர்யம் ஒன்றில்தான் இருக்குமென்று கண்டுகொள்ளவேண்டும். இவ்வபிப்பிராயத்தை ஒவ்வொரு மதஸ்தரும் ஒப்புக்

கொண்டு பலபல மார்க்கங்கள்கொண்டனபோலுள்ள சாஸ்திரங்களுக்கு அத்வைதத்தில் தான் பரமதாத்பர்யம் என்று அத்வைதிகளும்,விசிஷ்டாத்வைதத்தில் முடிவுபெறுகின்றனவென்று விசிஷ்டாத்வைதிகளும், த்வைதத்தில் என்று மத்வமதானுஸாரிகளும் இவ்விதமே ஒவ்வொரு சித்தாந்திகளுக்கிணங்கச்சொல்வதுபோல் இம்மந்திர சாஸ்திர ஸித்தாந்திகளும் வேதாதிப் பிரமாண நூல் யாவும் மந்திர சாஸ்திரத்தின் கருத்தையே விளக்குகின்றன என்று கொள்கிறார்கள் என்றும் சொல்லிவிடுவது ஒருவாறு பொருந்துமாயின் உண்மையில் இச்சாஸ்திரப் பிரபாவத்தால் தான் யாவரும் முக்திபெறலாமென்பதை யாரும் மறுக்க முடியாதென்பதைநீங்களும் அறியக்கூடும். அத்தகைய இம்மந்திரத்தின் பிரபாவத்தை மஹரிஷிகளும் நன்கறிந்தார்களில்லையென்றால் இக்கலியில் பாமரனானநான் அதன் பிரபாவத்தை எவ்வாறு உரைப்பேன். காலத்திரயத்திலும் முடியாதாயினும் ஒருவாறு இச்சபையிலுள்ள மகான்களின் பரமானுக்கிரகத்தாலும் என்உபாஸ்யதேவதையான ஸ்ரீராஜராஜேச்வரியின் பரமகிருபையினாலும் ஏதோ இவ்விஷயத்திலிறங்குகிறேன். இவ்விஷயத்தில் நேரும் குறைகளைப்போக்கிச் சிறிய குணத்தைப்பெருக்கியாளவேண்டுகிறேன். இனி மந்திர சப்தார்த்தத்தை முதலில் விசாரிப்பாம்.

मन्तारंत्रायते इतिमन्त्रः தியானிக்கிறவனை ரக்ஷிக்கிறதென்றாகிறது. मन्यते अनेनेतिमन्त्रः இதனால் அறியப்படுகிறது. முதல் அர்த்தத்தால் அதன் அதிஷ்டான தேவதை குறிக்கப்பட்டது. இரண்டாவதால் அக்ஷரஸமூஹம் குறிக்கப்படுகிறது. ஆகவே மந்திரம் என்ற பதத்திற்கு காப்பாற்றுகின்ற பரமாத்மாவென்றும் அக்ஷரராசியென்றும் பொருள்பட்டது. இதனால் உலகில் தற்காலம் மந்திரக்ஞன் அல்லது மாந்திரீகன் என்று பெயர்வைத்துக்கொண்டு பேய்பிசாசுகளை ஆட்டுவது ஓட்டுவது தான் தொழில் என்று கொண்டவனை நாம் மாந்திரீகனென்று சொல்லிவருதல் அர்த்தமற்றதென்றாயிற்று. இனி இங்கு மந்தா என்பவன் யார் அவனைக் காப்பாற்றுபவன் யார்? காப்பாற்றும்படி அவனுக்கு ஏற்பட்ட தசை என்ன? இவர்கள் எங்கிருக்கிறார்களென்பதை ஆராயவேண்டும். ஏனெனில் உலகில் ஒருவனை மற்றொருவன் காப்பாற்றுகிறானென்றால் காப்பாற்றப்படுபவனுக்கு காப்பாற்றிக்

கொள்ளும் திறமை இல்லையென்றும் காப்பாற்றுகிறவனுக்கு அத்திறமை பூர்ணமாய் இருக்கிறதென்றும் நிச்சயமாய்க்கண்டிருக்கிறோம். இதில் காப்பாற்றப்படுகிறவன் கஷ்டதசையை அடைந்து அதனின்று வெளியேறமுடியாமல் காப்பாற்றுகிறவனை அண்டி ஆசிரயித்தபின்தான் காப்பாற்றுகிறதென்பதும் தெரிந்தவிஷயம். ஆகவே இங்கு காப்பாற்றப்படுகிறவன் யார்? அவன் எங்கு வசிக்கிறான். காப்பாற்றுகிறவன் எங்கிருக்கிறான். இவர்களுக்கு சம்பந்தம் எவ்விதம் ஏற்படுகிறதென்பதை ஆராய்ந்தால் இங்குஜீவன்தான் காப்பாற்றப்பட வேண்டியவன் காப்பாற்றுகிறவன் பரமாத்மா பயம் என்பது அனுபிசித்தமான ஸம்ஸாரபந்தம் இச்ஜீவன் தன்னை காப்பாற்றும் பரமாத்மா இருக்குமிடத்தை நோக்கிச் செல்லவேண்டும். அவனிருக்குமிடமோ நமக்கு வெகு தூரமான பிர்மலோகம் வைகுண்டம் கைலாஸமென்ற தேசம்நம்மால் மனதால் கூட செல்லமுடியாதவிடம். அவரிடம்போய் முறையிட்டுதான் நமதுபயம் நீங்கவேண்டும் என்ன செய்வோமென்று புராணாதிகள் மூலம் கேட்டு பயந்து நடுக்கமுற்றிருக்கிற இச்சீவனை ஆச்வாஸம் செய்ய இம்மந்திரமென்ற சிந்தாமணிதான் வெகு சுலபமாய் சந்தோஷப்படுத்த ஏற்பட்டது. இதனால்தான் இம்மந்திர சாஸ்திரம் பரமரகசியமென்றும் வேதங்களின் திவ்யாத்னமென்றும் வேதங்களின் பரமசாரமென்றும் புகழப்படுவது நியாயம்தான். இனிஇம்மந்திரம் என்னகூறுகிறதென்பதைக் கவனிப்பாம். ஈசன் எங்கே நாம் எங்கே அவனை அடைய எப்படிமுடியுமென்று பிரமிக்கும் நமக்கு இம்மந்திரசாரம் ஒரு பழமொழி கூறிற்று அண்டத்திலுள்ளது பிண்டத்திலுமுண்டு என்று இதன் அர்த்தமிது. இது பிர்மாண்டமென்ற அகண்டமான மண்டலத்தில் யாதுளதோ அது பிண்டமென்றும் சரீரத்திலுமிருக்கிறதென்றும் வெளியிடுகிறது. இதை நாம் ஊஹித்தறியமுடியாதென்று கொண்டு நம் முன்னோர்கள் ஓர் உதாரணம் காட்டினர். அதாவது ஆறு அத்வா என்ற பிராகாரங்களைக் கடந்து ஏழாவது ஸ்தானத்திலிருக்கும் பரமாத்மாவை போதிக்கவே ஏழு பிராகாரங்கள் கடந்து சென்று உள்ளே தேவனை ஸேவிக்கும்படி கோயில்களைக்கட்டி உள்ளே சுவாமி என்ற பிம்பத்தை வைத்து தரிசிக்கும்படி பிரதிஷ்டை செய்தனர். இக்கோயில் என்றதும் அதனுள் பிராகாரங்கள் கடந்து நிற்கும் தேவபிம்பமும் என்ன தத்துவத்தை

நமக்கு வெளியிடுகிறதென்றால் பிரபஞ்ச தத்துவத்தையும் ஜீவதத்துவத்தையும், ஆத்மதத்துவத்தையும், உபதேசிக்கிறது. உதாரணமாய் ஸ்ரீரங்கம் போய் ரங்கநாதரை ஸேவிக்கவேண்டுமானால் ஏழுபிராகாரம் கடந்துசென்று உள்ளே இருட்டில் தீபத்தால் கூர்மையாய் பார்த்தால் தெரிகிறது. ஈசதரிசனம் நமக்கு முக்கியமாயினும் அவ்வீசனை ஓர் மைதானத்தில் வைக்கவில்லை.

அது இதை போதிக்கத்தான் ஏற்பட்டது. பிரபஞ்சங்களைக் களைந்து ஆறு அத்வாக்களை கஷ்டத்துடன் கடந்தவனுக்கு தான் பரமாத்மானுக்ரஹம் ஏற்படுமென்பதையல்லவா காட்டவந்தது? ஆகவே பிரபஞ்சத்தைக்காட்டவந்த கோயிலைப்போல்தான் தேகமென்று அடுத்து நம் மந்திரசாஸ்திரம் கூறுகிறது. देहोदेवालयः प्रोक्तः என்று இதை வைத்துத்தான் அண்டத்திலுள்ளது பிண்டத்திலும் என்று கூறிற்று. இனி இதனை விளக்குவாம். இத்தேகமென்ற கோவிலிலும் கடந்து செல்ல 7 பிராகாரமிருக்கிறது. முறையே இவைகளைக் கடந்து சென்றனபிறகு கர்ப்பக்கிருகமென்கிற பரமாத்மதஸ்தானமிருக்கிறது. அங்கு செல்ல முயற்சி செய்யவேண்டும். அங்கு செல்கிறவன் யார்? அவன் எங்கிருக்கின்றான் என்றால் செல்லவேண்டியவன் ஜீவன் அவன் இருக்கும் ஸ்தானம் ஹிருதய கமலம். செல்லவேண்டிய ஸ்தானம் 1000 தளங்களோடு கூடிய பத்மமென்ற லலாடஸ்தானம். அங்குதான் பரமாத்மா வசிக்கிறான். இனி இவன் எப்படிச் செல்வான். சகாயம் யார்? அதனுலென்ன? இவன் தாண்டக்கூடிய பிராகாரங்கள் எவை என்பதை கவனிப்பாம். அவையாவன— மூலாதாரம், ஸ்வாதிஷ்டானம், மணிபூரகம் அனாஹதம், விசுத்தி, ஆக்ஞா என்பன. இதற்குமேல் 7வது ஸஹஸ்ராரம் என்று சொல்லப்படும். அதுதான் பரமாத்மஸ்தானம். அந்த ஸ்தானம் போகப்பட்டால் தான் முக்தி என்னும் பேரின்பம் கிடைக்கும். இனி இச்சீவனின் வாசஸ்தானத்தையும் இவனுக்கு வந்த பயத்தையும் இதை நீக்க வழியையும் இவன் இருப்பிடத்தையும் இவனுக்கு ஸஹாயத்தையும் முதலில் செல்லவேண்டியவிடத்தையும் இவனது சகாயத்தையும்பற்றி ஆராய்வோம்.

(தொடரும்)

M. N. சுப்பிரமண்யசாஸ்திரிகள்.